**மன்னார் நகர சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 29 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 11 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பிரதான பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களின் அசைவு ரூபா 89,422,981 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 83,418,828 என தவறாகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,004,159 ஆல் தேறிய சொத்துக்கள் குறைத்துக் காட்டப்ட்டுள்ளது.

(ஆ) ஊழியர் பிணைப்பண வைப்புக் கணக்கு நிலுவை ரூபா 92,500 திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்பட்டமையால் திரண்டநிதி ரூபா 92,500 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் ஊழியர் பிணைப்பண வைப்புக் கணக்கு நிதிக்கூற்றுக்களில் விடுபட்டுமிருந்தது.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் பிரதான பேரேட்டின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மூன்று உருப்படிகளின் நிலுவைகளில் கூட்டுமொத்தம் ரூபா 228,381 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

மூன்று சென்மதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,576,048 கடந்த 1 தொடக்கம் 10 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 342.59 மில்லியன; கூட்டுமொத்தமான மூன்று கொடுக்கல் வாங்கல்களை காணி உறுதிகள், கடன்களின் வயதெல்லை அட்டவணை மற்றும் உறுதிப்படுத்தல்கள் என்பன கிடைக்கப் பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | நகரசபைகள் கட்டளைச் சட்டம் | | |
| | அத்தியாயம் 255 இன் பிரிவு 160 | 10,734,156 | வீதவரி நிலுவைகள் அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | |
| | நிதி ஒழுங்குவிதி 371 | 1,693,168 | 13 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வெளித் தரப்பினர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்த முற்பணங்கள் கடந்த 05 தொடக்கம் 33 ஆண்டுகளாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | மாகண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கை | |
| | 2017 மே 17 இன் பிஎல்/15/5/செபரேஷன்/யு ஆம் இலக்கம் | சபையினால் குப்பைகளை தரம்பிரித்து ஏற்றுவதற்கான நடைமுறையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 50,079,801 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவீனத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 27,014,174 ஆகவும் விளைந்திருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறன மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறன மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 17,080,000 | - | 18,324,367 | 16,093,904 | 1,260,000 | - | 1,301,281 | 4,494,798 |
| (ii) | வாடகைகள் | 22,309,300 | - | 30,760,213 | 2,020,990 | 19,521,400 | | 24,981,997 | 1,673,830 |
| (iii) | உரிமங்கள் | 1,010,000 | - | 1,240,841 | - | 3,055,000 | | 3,593,588 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,987,250 | - | 21,273,993 | 21,242,002 | 4,015,000 | | 5,901,914 | 37,828,591 |

### 2.2.2 வீதவரிகள்

வீதவரிகள் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,614,797 கடந்த 1 தொடக்கம் 10 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

வாடகை நிலுவைககளின் கூட்டுமொத்தம் ரூபா 501,415 கடந்த 1 தொடக்கம் 10 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 15,081,916 தொகையான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடத்திற்க்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.
(ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை
(iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.
(iv) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
(v) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.
(vi) திண்மக் கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக் கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தன.
(vii) சபையினால் கழிவு முகாமைத்துவத்திற்காக செலவாகும் கிரயத்தினை திரட்டிக்கொள்வதற்காக குப்பைவரி அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றுச்சூழல் விடயங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மன்னார் கீரிக்கடற்கரை, கடற்கரைப் பூங்கா மற்றும் நகர பொது மலசலகூடம் என்பனவற்றின் முறையான பராமரிப்பின்மையால் சுகாதார சீர்கேடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(ii) பள்ளிமுனையில் காணப்படும் பெருக்கமரம் மற்றும் அதன் சுற்றுச் சூழலை புத்தாக்கம் செய்து பராமரிக்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டில் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த வீதி விளக்குகளினைப் பொருத்துதல் தொடர்பிலான 17 முறைப்பாடுகள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

இளைப்பாற்றப்பட்ட மற்றும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஐந்து அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியனர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 509,409 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மேலதிக கொடுப்பனவு**

மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 5,240,866 மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சபையின் முன்னைய தலைமை அலுவலகத் திருத்த வேலைக்களுக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 196,892 மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையில் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த பரிந்துரைகள், விதந்துரைப்புக்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டுக்கும் உண்மைக்குமிடையிலான செலவின வேறுபாடு ரூபா 7,982,141 ஆல் பாதகமாகக் காணப்படுகின்றது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பிரதான பேரேடு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருமானங்கள் | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதனவரி அறவீடு செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறவேண்டியகணக்குகள் | சபைக்கு வருமதியாகவுள்ள அரசிறை மற்றும் செயன்முறைக் கட்டணங்களை அறவீடு செய்ய வருமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சொத்துக்கள் | சபைக்கு உரித்தான காணி கட்டடங்கள் வீதிகள், சேமக்காலைகள் மற்றும் விலங்கு அறுமனைகள் போன்றவற்றின் உரிமைப் பத்திரங்களை ஆவணப்படுத்தத் தவறியமை. |